# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணையஇதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2048 ● ஜூலை 22, 2017

Weekly E-paper ● July 22, 2017


## மாணவர்களின் மீது பாயும்

# குண்டர் சட்டம்

சுப. வீரபாண்டியன்



ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து, இறுதியில் தமிழக மாணவர்களைக் கடிக்கத் தொடங்கியுள்ளது தமிழக அரசு! தமிழ்நாட்டில் முதன்முறையாக,வளர்மதி என்னும் ஒரு மாணவியின் மீது குண்டர் சட்டம் பாய்ந்திருக்கிறது. இன்னும் ஓர் ஆண்டு காலம், எந்த விசாரணையும் இன்றி, அம்மாணவி சிறையில் இருக்க நேரிடலாம். இல்லையென்றாலும், விசாரணைக்குழு, நீதிமன்றத் தீர்ப்பின்படி, ஆறேழு மாதங்களுக்குப் பின் விடுதலை ஆகலாம்.

தமிழ்நாடு குண்டர் சட்டம் என்பது எம்ஜிஆர் ஆட்சிக் காலத்த்தில் கொண்டுவரப்பட்ட ஒன்று. 1982 மார்ச் 12 ஆம் தேதி, இந்தியக் குடியரசுத் தலைவர் அதற்கு ஒப்புதல் அளித்தார். குறிப்பாகத் தொடர் குற்றங்களில் ஈடுபடும் சமூக விரோதிகள் (bootleggers), கள்ளச் சாராயம் காய்ச்சுவோர், போதைப் பொருள் கடத்துவோர் ஆகியோரை, எந்த விசாரணையுமின்றி, உடனடியாகக் கைது செய்வதற்காக அந்தச் சட்டம் என்று சொல்லப்பட்டது. பிறகு திருட்டு விசிடி வைத்திருப்போருக்கும் அந்த சட்டம் செல்லுபடியாகும் என்னும் திருத்தம் கொண்டுவரப்பட்டது.

அந்தச் சட்டம்தான் இன்று மே 17 இயக்கத் தலைவர் திருமுருகன் காந்தி, கதிராமங்கலம் போராட்டத்தில் ஈடுபட்ட பேராசிரியர் ஜெயராமன், மாணவி வளர்மதி ஆகியோர் மீது 'பாய்ந்திருக்கிறது.'

வளர்மதியின் மீது ஏற்கனவே ஆறு வழக்குகள் உள்ளன என்று முதலமைச்சர் சட்டமன்றத்தில் கூறுகின்றார். அந்த வழக்கில் ஒன்று கூட, சமூக விரோதச் செயல்பாடு சார்ந்ததன்று. மாணவர் போராட்டங்களில் கலந்து கொண்டது, மக்களின் அறவழிப் போராட்டங்களுக்குத் துணை நின்றது ஆகியவற்றிற்காகத் தொடுக்கப்பட்ட வழக்குகளே அவை. அவற்றின் அடிப்படையில் எப்படி, குண்டர் சட்டத்தின் கீழ்க் கைது செய்யலாம்?

இது வெறுமனே ஒரு கைது நடவடிக்கை அன்று. இதற்குள் ஓர் அரசியல் இருக்கவே செய்கிறது. கைது செய்யப்பட்டுள்ள அனைவரும் மத்திய அரசின் திட்டங்களை எதிர்த்துப் போராடியவர்கள் என்பதை நாம் நினைவில் கொள்ள வேண்டும். சமூக வலைத்தளங்களில் வருவது போல, தமிழ்நாட்டின் சிரிப்புப் போலீஸான எடப்பாடியை எதிர்த்து யார் வேண்டுமானாலும் போராடலாம். ஆனால் மத்திய அரசை எதிர்த்தால் கடும் சட்டங்களின் கீழ் கைது செய்யப்படுவார்கள். ஆக, எஜமானின் ஆணைக்கு ஏற்ப ஆடும் எடுபிடி அரசுதான் இங்கு உள்ளது.

இது ஓர் அச்சுறுத்தல். மத்திய அரசின் திட்டத்தை யாரேனும் எதிர்த்தால், அவர்கள் மாணவர்களாக இருந்தாலும், ஓராண்டு சிறையில் அடைக்கப்படுவார்கள் என்னும் அச்சுறுத்தல். மாணவர்களின் மீதும், ஜனநாயக சக்திகளின் மீதும் தொடுக்கப்பட்டுள்ள ஒடுக்குமுறை, அரச பயங்கரவாதம்!

சல்லிக்கட்டுக்காக ஆயிரக்கணக்கில், பல்வேறு ஊர்களிலும் கூடிய மாணவர்கள் இப்போது எங்கே? இன்று ஒரு மாணவிக்குநேர்ந்துள்ளது, எதிர்காலத்தில் பிறருக்கும் நேராது என்பதற்கு என்ன உறுதி? அறவழிப் போராட்டங்களை ஒடுக்க நினைக்கும் அரசுகளுக்குத் தமிழக மக்கள் தரப்போகும் விடை என்ன? இதுவே இன்றைய காலத்தின் குரல்!

# பாஜகவின் தலித் ஆதரவு?



இந்தியக் குடியரசுத் தலைவராக ராம்நாத் கோவிந்த் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். அவருக்கு நம் வாழ்த்துகள்!

புதிய குடியரசுத் தலைவர் ஒரு தலித் என்று சொல்லப்படுவது அவ்வளவு உண்மையன்று. அவர் கோலி என்னும் சமூகத்தைச் சேர்ந்தவர். நெசவாளர்கள் அவர்கள். அச்சமூகம் எப்போதும் தீண்டாமைக்கு ஆளானதில்லை. அந்தச் சமூகத்தின் பெயர், அட்டவணைச் சாதியினரின் பட்டியலில் இடம்பெற்றுள்ளது என்பது மட்டுமே உண்மை. அதனை வைத்துக் கொண்டு, நாங்கள் தலித் மக்களின் ஆதரவாளர்கள் என்பது போன்ற ஒரு பொய் முகத்தைக் காட்ட பாஜக முயல்கிறது.

அதே நேரத்தில், வெங்கையா நாயுடுவைத் துணைக் குடியரசுத் தலைவர் ஆக்குவதன் மூலம், முழு அதிகாரத்தையும் அவர் கைக்குக் கொண்டுவர பாஜக முயலும் என்பது வெளிப்படை.

இது ஒருபுறமிருக்க, தலித் ஆதரவு பேசும் மத்திய அரசு, தலித் மக்களின் வேதனைகளைப் பற்றிப் பேசுவதற்காக, நாடாளுமன்றத்தில் எழுந்த மாயாவதிக்கு மூன்று நிமிடங்கள் மட்டுமே ஒதுக்கியது. எவ்வளவோ நேரம், கூச்சல் குழப்பங்களில் வீணாகும் போது, தலித் மக்களின் சிக்கல்கள் குறித்துப் பேச 10 நிமிடங்களைக் கூட ஆளும் அரசினால் ஒதுக்க முடியவில்லை. இப்போது அவர் தன் பதவியை விட்டு விலகியிருக்கிறார்.

இதுதான் பாஜகவின் தலித் ஆதரவு முகம்!

ஆசிரியர்
**சுப.வீரபாண்டியன்**

பொறுப்பாசிரியர்
**எழில். இளங்கோவன்**

நிர்வாக ஆசிரியர்கள்
**சிற்பி செல்வராஜ்**
**கி.செந்தில்**

வெளியிடுபவர்
**கோ.தினகரன்**

இணையதளம்
**www.keertru.com**

சுபவீ வலைப்பூ
**www.subavee.com**

மின் அஞ்சல்
**karunchattai@gmail.com**

டுவிட்டர்
**suba_vee**

தொடர்புக்கு
**122/130 என்.டி. ராமராவ் தெரு**
**ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்**
**சென்னை - 600 024**

**தொலைபேசி: 044-4204 7162**



**செ**ன்னை எழும்பூர் இக்சா மையத்தில் 2017 ஜூன் 15 அன்று ஆய்வு மாணவி பகுத்தறிவு எழுதிய 'நூற்றாண்டில் திராவிடன்' நூல் வெளியீட்டு விழாவில் தோழர்கள் சுப.வீரபாண்டியன், ஓவியா ஆகியோர்.

## கமல்ஹாசன் செய்தது சரியா?



(ஹலோ எப்.எம். மற்றும் சில தனியார் தொலைக்காட்சிகளுக்குத் தோழர் சுபவீ அளித்த நேர்காணல்களிலிருந்து.....)

**வினா:** கமல்ஹாசன் தமிழக அரசு குறித்துக் கூறியிருப்பதும், அதற்கு எழுந்துள்ள எதிர்வினைகள் குறித்தும்.....?

**விடை:** கமல் சரியாகத்தான் கூறியுள்ளார். தமிழகத்தில் எங்கும் ஊழல் பரவியுள்ளது என்று அவர் கூறியிருப்பது மிகச் சரியானது. அது குறித்து அதிமுக அச்சம் கொள்வதை நம்மால் புரிந்து கொள்ளமுடிகிறது. பாஜக ஏன் பதறுகிறது என்பதுதான் புரியவில்லை.

**வினா:** கமல் அரசியலுக்கு வருவது குறித்து?

**விடை :** அது அவர் விருப்பம். ஆனால், தமிழக அரசு குறித்துப் பேசும் அவர், இன்றைய மத்திய அரசின் மதவாதப் போக்கு, இந்தியாவின் பன்மைத் தன்மையை அழிக்க முயலும் சர்வாதிகாரம் ஆகியன குறித்தும் பேசியிருக்க வேண்டும்.

**வினா:** தமிழக அமைச்சர்களின் பதிலகள் எவ்வாறு உள்ளன?

**விடை:** அமைச்சர்கள் சிலரின் எதிர்வினைகள் தரம் தாழ்ந்தவையாக உள்ளன. குறிப்பாக, உயர்கல்வித் துறை அமைச்சர் அன்பழகன் அவன், இவன் என்று ஒருமையில் பேசியிருப்பது, அவர் வகிக்கும் பொறுப்புக்கு உகந்ததாக இல்லை.

**வினா:** கமல் முதுகெலும்பு இல்லாதவர் என்று ஹெச். ராஜா சொல்லியிருக்கிறாரே?

**விடை:** ஹெச். ராஜா என்றைக்கு கண்ணியமாகப் பேசியிருக்கிறார்? தூய்மை பாரதம் திட்டத்துக்கு கமலைத் தூதுவராக மத்திய அரசு நியமித்ததே, அப்போது கமலுக்கு முதுகெலும்பு இருந்ததாமா?

## தமிழருவி மணியனின் தவிப்பு



**தி** இந்து நாளேட்டில் (21.07.17), கமல் கருத்து குறித்துத் தமிழருவி மணியன் கூறியுள்ளார். "ரஜினி உருவாக்கும் அரசியல் அமைப்பில், கமல் துணையாக நிற்பது ஏற்புடையதாக இருக்கும். அதிமுக மீது உள்ள கோபத்தைத் தணிப்பதற்கு, திமுகவின் பக்கம் திசை திரும்பிப் போனால், அரசியல் அமைப்பு சீர்கெட்டுள்ளது என்பதற்குச் சரியான அர்த்தம் இல்லாமல் போய்விடும்" என்கிறார் அவர்.

இன்றுவரை தொடங்கப்படாத ஓர் அமைப்புக்குத் துணை நிற்க விடுக்கும் அழைப்பு ஒரு பக்கம் அதிசயம் என்றால், திமுக பக்கம் யாரும் போய்விடக் கூடாது என்னும் அவரின் தவிப்பு மறுபக்கம் பரிதாபத்திற்குரியதாக உள்ளது.

*தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!*

# கருஞ்சட்டைத் தமிழர்




**இ**துவரை 55 ஆயிரம் ரூபாய் சம்பளம் வாங்கிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இனி 1 லட்சத்து 5 ஆயிரம் ரூபாய் இது தமிழக முதல்வர் எடப்பாடியின் அறிவிப்பு.

இந்தியக் கணக்குத் தனிக்கைத் துறையின் தமிழக அலுவலர் ஓர் அறிக்கையை வெளியிட்டுள்ளார்.

41 பொதுத் துறை நிறுவனங்களில் 21 நிறுவனங்கள் 81 ஆயிரம் கோடி ரூபாய் இழப்பில் இயங்குகின்றன.

கடந்த ஆண்டு 115 மெகா வாட் மின்சாரம் சில தனியார் நிறுவனங்களில் இருந்து பேறப்பட்டதில் ஏற்பட்ட 11 கோடி இழப்புடன், மின் வாரியம் 65 ஆயிரத்து 622 கோடி இழப்பில் இயங்குகிறது.

8 போக்குவரத்து நிறுவனங்களின் இழப்பு 22 ஆயிரத்து 600 கோடியுடன் அதைச் சார்ந்த நிறுவனங்களின் மொத்த இழப்பு 80 ஆயிரத்து 925 கோடி இழப்பு.

கலைஞரால் கொண்டு வரப்பட்ட சமச்சீர்க் கல்வியை ஒழித்துக்கட்ட தமிழக அரசு செய்த குளறுபடிகளில் 4 கோடியே 41 லட்சம் புத்தகங்கள் அச்சடிக்கப்பட்டு, அவையும் பயனற்றுத் தேங்கிப்போயின.

அந்த வகையில் அரசுக்கு இழப்பு 13 ஆயிரத்து 37 கோடி.

தமிழக அரசின் நிதிப் பற்றாக்குறை 5 லட்சம் கோடியைத் தாண்டிப் போய்கொண்டு இருக்கிறது.

வருவாய்ப் பற்றாக்குறை ஏறத்தாழ 12 ஆயிரம் கோடி.

இப்படித் தமிழக அரசின் கழுத்தை நிதி நெருக்கடி நெறித்துக்கொண்டிருக்கிறது.

தமிழகத்தில் ஏரிகள், ஊருணிகள், கண்மாய்கள், அணைகள் எல்லாம் வரண்டு போயின.

தண்ணீர்த் தட்டுப்பாடு மாநிலம் முழுவதும் தலைவிரி கோலமாய் ஆடிக்கொண்டிருக்கிறது.

இதனைச் சரி செய்ய அரசு எந்த நடவடிக்கையும், முயற்சியும் எடுக்கவில்லை.

விவசாயிகள் வறுமையில் வாடுகிறார்கள்.

துணித்துறை ஊசலாடிக்கொண்டிருக்கிறது.

சிறு, குறு தொழில்கள் எல்லாம் நலிந்து நசிந்து போய் கொண்டிருக்கின்றன.

இவைகளைப் பார்க்க வேண்டிய சட்ட மன்ற உறுப்பினர்களின் 'பலர்' கூவத்தூரில் ஆட்டம் போட்டு, பெட்டிகளோடு அடித்த கூத்துகள் ஊடகங்களில் வெளியாகின.

குற்றவாளி சசிகலாவிற்கு ஆதரவாக ஒரு கூட்டம், டி.டி.வி.தினகரனுக்கு ஆதரவாக ஒரு கூட்டம், ஓ.பி.எஸ்-ஈ.பி.எஸ் ஆதரவுக் கூட்டம் எனப் பல கூட்டங்கள் இவர்களுக்குள் நடக்கும் சண்டைக்காட்சி வேறு.

நாடு திவாலாகிக் கொண்டிருக்கிறது.

மக்களின் வாழ்வாதாரங்கள் அழிந்து கொண்டிருக்கின்றன.

ஆனாலும் ஆளும் அ.தி.மு.க.வினர் இதைப்பற்றிக் கவலை கொண்டதாகத் தெரியவில்லை, முடிந்த வரை சுருட்டும் வேலையில் இருக்கிறார்கள்.

ஆட்சி மாறாமல் இந்தக் காட்சிகள் மாறாது.

மக்கள் இதைப் புரிந்துக் கொள்ளத் தொடங்கிவிட்டார்கள்.

# ஏன் எதிர்க்கவில்லை மத்திய அரசை?



தோழர் ஓவியா

கமலகாசன் சிறந்த நடிகர். அது மட்டுமல்ல திரைத் துறையில் துணிச்சலான முயற்சிகளை முன்னெடுப்பவர். இதையெல்லாம் மறுப்பவளில்லை நான். ஆனால் இப்போது அவர் தொடங்கியிருக்கும் விவாதத்தில் அரசியல் இருப்பதாக நான் நினைக்கிறேன். பிக் பாஸ் என்றொரு நிகழ்ச்சி நாம் கண்டுகொள்ளாமலிருப்பதால் கோடிக்கணக்கான மக்கள் பார்க்காமல் இருக்கப் போவதில்லை. இந்தி தெரியாத நம்மைப் போன்ற பாமரர்களுக்கு இப்படியெல்லாம் பல விசயங்களை அறிந்து கொள்ள முடியவில்லை என்கிறார் கமல். தமிழுக்கு இப்போது அறிமுகம். கூடி வாழ்தலை இந்த மக்களுக்குக் கற்றுக் கொடுக்கிறார்களாம். சரி, அந்த நிகழ்ச்சிப் பற்றி படித்து இந்நேரம் எல்லோருக்கும் அலுத்திருக்கும். விஷமமான பல விசயங்கள் அதிலிருக்கின்றன. அதற்கு பதிலளித்திருக்கும் அவரின் பதில்களைப் பற்றித்தான் இந்த பதிவு. ஜல்லிக்கட்டு போராட்ட அவமதிப்பு தமிழ்த்தாய் வாழ்த்து அவமதிப்பு தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான அவமதிப்பு – இப்படித் தொடர்கிறது குற்றச் சாட்டுகளின் பட்டியல்.

தமிழ் வராத மாதிரி நடிக்கும் சிலரை வைத்து தமிழ்த்தாய் கற்றுக் கொடுப்பதாக ஏன் அவமானப்படுத்தினீர்கள் என்று கேட்டால், சொல்லிக் கொடுத்தோம் என்கிறார். இவ்வளவு நாள்கள் திரைத் துறையிலிருந்தவருக்கு ஒரு காட்சி மக்களிடம் என்ன பேசுகிறது என்பதுதான் முக்கியம் என்பது கூடவா தெரியாது? அவர்கள் தமிழ் வராதது மாதிரி நடிப்பது போல் இது ஒரு நடிப்பு. அதில் வரும் காயத்ரி என்ற பெண் சாதித் திமிரோடு பேசியிருக்கிறார் என்றால் வெளியில் வந்தவுடன் நீங்கள் அவரிடம் கேட்டுக் கொள்ளுங்கள் என்கிறார். பேசியவர்களுக்கு மட்டுமல்ல காட்சிப் படுத்தியவர்களுக்கும் பொறுப்பில்லையா? அதன் மிகப் பெரிய பிம்பமாகிய இவருக்கு பொறுப்பில்லையா?

இதற்கு முன் ஜிஎஸ்டி பிரச்சனை தொடங்கிய போது தமிழக அரசு ஊழலில் மிதக்கிறது என்றார். இப்போது நம்மவர்களும் வரிந்து கட்டிக் கொண்டு அதில் என்ன தப்பு என்கிறார்கள். தப்பில்லை. ஆனால் ஜிஎஸ்டி பிரச்சனையில் மத்திய அரசைக் கேள்வி கேட்காமல் இவருக்கு ஏன் மாநில அரசின் மீது கோபம் வருகிறது? செயலலிதா அம்மையார் போன பிறகு இவரது துறையைப் பாதிக்கும் விதமாகத் தமிழக அரசு என்ன செய்தது? இப்போது அளிக்கும் பேட்டிகளிலும் அந்த வாதத்தைத் தொடர்கிறார். தமிழக அமைச்சர்கள் கோபமாகப் பதிலளித்தவுடன் அவர்களை எதிர்ப்பதற்காக கமலகாசனுக்கு ஆதரவு நிலைப்பாடு எடுக்கிறார்கள் எதிர்க்கட்சிக்காரர்கள். அவர்களுக்கு ஒரு வார்த்தை. தமிழக அரசை நீங்கள் எதிர்த்துப் பணி செய்யுங்கள். அதற்கு எதற்கு கமலகாசன்? கமலிடம் முதலில் பிக் பாஸைப் பற்றிப் பேசுங்கள். பிறகு அவரை ஆதரிக்கலாம்.

இதில் இன்னொரு பெரிய அபாயம். நான் கறுப்புச்சட்டைக்காரன். எனவே இந்து மக்கள் கட்சி தன்னை எதிர்க்கிறது என்கிறார். இங்குதான் நமக்கு பலமாக உதைக்கிறது. கறுப்பு வண்ணம் அவருக்கு அழகாக இருக்கலாம். ஆனால் கறுப்பு சட்டை போட்டால் கருப்புச்சட்டைக்காரராக முடியாது. சைவத்திலும் வைணவத்திலும் மாறி மாறிப் பயணம் செய்ய விரும்பும் கமலகாசன் கருஞ்சட்டைப் படையில் சேரமுடியாது. பிக் பாஸ் மாதிரியான ஒரு நிகழ்ச்சியில் அவர் தன்னை பெரியார் பற்றாளராக அடையாளம் காட்ட முனைவதில் நாம் கவனமாக இருக்க வேண்டும்.

(முகநூல் பதிவு)

# ராஜ மரியாதையுடன் ஒரு சிறை!

மு.தமிழ்மறவன்

சசிகலா சிறையில் சகஜமாக இளவரசியுடன் வலம் வரும் காட்சியும், மற்றும், அவருக்குப் பரப்பன அக்ரஹாரத்தில் ,பெங்களூரு சிறையில் தரப்பட்ட வசதிகள் (ஐந்து அறைகளில்) அனைத்தும் ஊடகங்களில் வலம் வந்து, தமிழகத்தின் பெருமையை உலகத்துக்கே பறைசாற்றுகின்றன.

ஒடுக்கப்பட்ட இராம்குமார் போன்றோருக்கு மரணத்தைப் பரிசளிப்பதும், மனித உரிமை மீறல்களுக்குப் பெயர்போன இந்திய சிறைத்துறைகள், ஊழல் பெருச்சாளிக்கு ஐந்து நட்சத்திர விடுதிகளைப் போல் வசதி செய்து கொடுப்பதும், சிறைத்துறையே ஊழலில் திளைப்பதும், சனநாயக அமைப்பு முறையையே கேலிக் கூத்தாக்கும் செயலன்றோ.

மேலும் இப்படிப்பட்ட அநீதிகளை மக்களிடம் துணிந்து அம்பலப்படுத்தும் அதிகாரிகளின் நிலையோ அந்தோ பரிதாபம்!

இக் கொடுமைகளை வெளி உலகிற்கு கொண்டு வந்த டி.ஐ.ஜி. ரூபா இன்று போக்குவரத்துத் துறைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

2கோடி கொடுத்து 5 நட்சத்திர ஒட்டல் வசதியுடன் தவவாழ்க்கையா?

ஒருவேளை இதுகூட தி.மு.க வின் சதியென கூப்பாடு போட்டாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை! அவர்கள் வீட்டு அடுப்படியில் பூனை அழுதாலும் ஸ்டாலின் கிள்ளியிருப்பாரோ எனும் மனநோய் பீடித்த மைய அரசின் அடிமைச் சங்பரிவாரமாய் மாறிப்போய் நிற்கிறது அ.தி.மு.க.



அதிமுக என்ற கொள்ளைக் கூட்டத்தின் ஊழல்களோ நெடுஞ் சாலை, பொதுப்பணித்துறை, கல்வி, போக்குவரத்து, பத்திரப்பதிவு, மதுவிலக்கு, வணிகவரி, உள்ளாட்சி, வேளாண்மை, சுகாதாரம், தொழில் என்று ஒவ்வொரு துறையிலும் கொடிகட்டிப் பறக்கிறது. தமிழகத்தையே அ.தி.மு.க கூவாத்தூரராய் மாற்றிக் கூத்தடிப்பதும் காவி மைய அரசிற்குத் தெரியாதா?

தங்களுக்கு எதிரான அரசியல் நிலைப்பாட்டை எடுப்பவர்களின் மீது மட்டுமே ரெய்டு நடத்துவதும், மிரட்டிப் பணிய வைப்பதுமாகத் தங்களுக்கான ஓர் பினாமி அரசை நிறுவ முயல்கிறது பா.ஜ.க. தமிழகத்தில் தேர்ந்தெடுக்கப்பட்ட மக்களாட்சியை தி.மு.கழகம் எக்காலத்திலும் நிறுவிடக் கூடாதெனப் பார்ப்பனீய மோடி அரசு செயல்படுகிறது.

சமூக நீதியை முன்னெடுக்கும் கலைஞரின் ஆட்சிதான் ஊழல் பெருசாளிகளை ஒழிக்க ஒரே வழி என்பதைத் தமிழக மக்கள் உணர்ந்துவிட்டதைக் கண்டு பதறும் பா.ஜ.க எத்தனைக் காலம்தான் சர்வாதிகார ஆட்சி நடத்திக் கொண்டிருக்க முடியும்?

அடக்குமுறைகளால் மக்களின் போராட்டதை ஒழித்து விடலாம் என நினைப்பவனே உலகில் மிகப்பெரிய முட்டாள்!

ஒருபக்கம் சசிகலாவை கைது செய்து இராஜ மரியாதையோடு வைத்திருப்பதும், இன்னொரு பக்கம் தமிழக அமைச்சர்களுக்குள் சிண்டு முடித்துக் கொள்ளைக் கூட்டத்தைத் தனக்காக வழி நடத்துவதும்தான் ஆரியத்தின் தன்மையாகும்.

இந்தியாவின் பல மாநிலங்களைத் தன்னுள் செரித்துக் கொண்ட பார்ப்பனீயம், இதுவரை வாலாட்ட முடியாத தமிழகத்தை அ.தி.மு.க என்னும் பினாமி அடிமைகளை வைத்துக் கொண்டு சின்னாபின்னமாக்கி சிதைத்து விட என்னும் எண்ணம் ஒருக்காலும் பலிக்காது.

## மறக்க முடியுமா?

## உரைவேந்தர்

# ஒளவை சு.துரைசாமி

எழில்.இளங்கோவன்

கல்வெட்டுப் படியெடுத்தல், ஏடுபார்த்து எழுதுதல், செப்பேடுகளைத் தேடி ஆய்வு செய்தல் ஆகியனவற்றில் தேர்ந்த இலக்கிய – இலக்கண ஆய்வறிஞர், உரைவேந்தர், நாவலர், பேரவைத் தமிழ்ச்செம்மல், சித்தாந்த கலாநிதி என்று தமிழ் உலகத்தால் போற்றப்பட்டவர் ஒளவை சு.துரைசாமி பிள்ளை அவர்கள்.

கவிஞர் சுந்தரம் பிள்ளை, சந்திரமதி அம்மையாரின் ஐந்தாம் மகனாக பிறந்தவர் இவர்.

பிறந்த ஆண்டு 1902 செப்டம்பர் 5.

வேலூர் மாவட்டத்தைச் சேர்ந்த இவரின் சொந்த ஊர் ஒளவையார் குப்பம் என்பதனால், இவர் ஒளவை துரைசாமி என்று அழைக்கப்பட்டார்.

இவரின் தொடக்கக் கல்வி உள்ளூரில். அதில் திண்ணைக்கல்வியும் அடங்கும்.

திண்டிவனத்தில் அமெரிக்கன் ஆர்க்காடு நற்பணி உயர்நிலைப் பள்ளியில் இறுதி வகுப்பு வரை பயின்றார். ஊரிசு கல்லூரியில் அவரின் கல்வி தொடர்ந்தது.

குடும்பத்தில் பொருளாதார நெருக்கடி. அதனால் கல்லூரி இடை நிறுத்தமாகி, ‘உடல் நலத் தூய்மை’ மேற்பார்வையாளராகப் பணியாற்றினார்.

அக்காலத்தில் ‘துப்புரவு’ பணித்துறை இது என்பது குறிப்பிடத்தக்கது.

இப்பணியில் 6 மாதங்கள் பணியாற்றிப் பின் அதிலிருந்து விலகினார், காரணம் அவரின் ஆழ்ந்த தமிழ்க் காதல்தான்.

பாவரசு வேங்கடாசலம் அவர்களிடம் ஒளவை துரைசாமி தமிழ் இலக்கிய, இலக்கணங்களைப் பயின்றார். நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களிடமும் தன் தமிழ் அறிவை வளர்த்துக்கொண்டார்.

சைவ சமயம் குறித்த கல்வியைக் கந்தசாமித் தேசிகர், தவத்திரு வாலையானந்தா அடிகள் ஆகியோரிடம் பயின்றார்.

அன்றைய வட ஆர்க்காடு மாவட்டத்தில் சில பள்ளிகளில் தமிழாசிரியர் பணி –

இராணிப்பேட்டை காரைத் தொடக்கப்பள்ளியில் தமிழ் ஆசிரியர் –

1929 தொடக்கம் சில ஆண்டுகள் செங்கம், போளூர், காவிரிப்பாக்கம், செய்யாறு ஆகிய இடங்களில் பள்ளித் தலைமையாசிரியர் பணி.

கரந்தைத் தமிழவேள் உமா மகேசுவரனார் அவர்களால் கரந்தைத் தமிழ்ச் சங்கப் பள்ளியில் ஆசிரியராக நியமிக்கப் பெற்ற ஒளவை துரைசாமி, அப்பணியில் இருந்துகொண்டே சென்னைப் பல்கலைக்கழகத்தில் ‘வித்வான்’ படிப்பில் தேர்ச்சி பெற்றார்.

1942ஆம் ஆண்டு திருப்பதி திருவேங்கடவன் கீழ்திசைக் கல்லூரியில் பேராசிரியர் ஆனார்.

1943 தொடக்கம் 8 ஆண்டுகள்



அண்ணாமலைப் பல்கலைக் கழகத்தில் ஆய்வுத்துறை விரிவுரையாளராக இருந்தபோது இவர் எழுதிய சைவ சமய இலக்கிய வரலாறு என்ற நூல் அப்பல்கலைக் கழகத்தால் வெளியிடப்பெற்றது.

1951ஆம் ஆண்டில் இவர் மதுரை, தியாகராயர் கல்லூரியில் பேராசிரியர் ஆனார்.

தொடர்ந்து மதுரைப் பல்கலைக்கழக ஆய்வுப் பேராசிரியராக இருந்தபொழுது இவரால் எழுதப் பெற்ற ‘ஊர் பெயர் வரலாற்று ஆராய்ச்சி’ என்ற நூல் இறுதிவரை அச்சாகாமலே போய் விட்டது.

புறநானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து ஆகிய சங்க இலக்கியங்களுக்கு மிகச் சிறந்த உரை எழுதியிருக்கிறார்.

திருவருட்பா 9 தொகுதிகளுக்கும், ஞானாமிர்தம், சிவஞானபோதம் ஆகியவைகளுக்கும் இவரின் உரை குறிப்பிடத்தக்கது.

‘யசோத காவியம்’ என்ற சமண இலக்கிய நூலை ஓலைச்சுவடியில் இருந்து ஆய்ந்து உரை எழுதியவர் ஒளவை துரைசாமி.

வடமொழியில் பல்லவ மகேந்திரன் இயற்றிய ‘மத்த விலாசம்’ என்ற நாடக இலக்கியத்தை தமிழில் மொழியாக்கம் செய்தவர் இவர்.

சிலப்பதிகாரச் சுருக்கம் – மணிமேகலைச் சுருக்கம் – சீவகசிந்தாமணிச் சுருக்கம் – சூளாமணிச் சுருக்கம் – சிலப்பதிகார ஆராய்ச்சி – மணிமேகலை ஆராய்ச்சி – சீவகசிந்தாமணி ஆராய்ச்சி – திருவோத்தூர் தேவார திருப்பதிக உலா – சைவ இலக்கிய வரலாறு – பண்டைய சேர மன்னர் வரலாறு என 34 நூல்கள் இவரால் எழுதப்பெற்றுள்ளன.

இவை தவிர ஊர்ப் பெயர் வரலாற்றாராய்ச்சி – தமிழ்த்தாமரை – மருள்நீக்கியார் நாடகம் – ஊழ்வினை என இவர் எழுதிய 7 நூல்கள் அச்சாகாமலே போய்விட்டன.

ஒளவை துரைசாமி அவர்கள் தான் எழுதிய நூல்களுக்கான உரைகள் அனைத்தையும் முழுமையாக எழுதியிருந்தாலும், மணிமேகலைக்கு கடைசி 4 காதைகளுக்கு மட்டுமே உரை எழுதினார்.

பாகனேரி மு.காசி விஸ்வநாதம் அவர்கள் நாவலர் ந.மு.வேங்கடசாமி நாட்டார் அவர்களைக் கொண்டு சிலப்பதிகாரத்திற்கு உரை எழுதச் செய்தது போல மணிமேகலைக்கும் அவரைக் கொண்டே உரை எழுதச் செய்தார்.

30 காதைகள் கொண்ட மணிமேகலையின் 26 காதைகளுக்கு மட்டுமே உரை எழுதிய நாட்டார் அவர்கள், உடல்நிலை தொய்வு காரணமாகத் தொடர்ந்து உரை எழுத இயலாநிலை ஏற்பட்டது.

இதனால் பாகனேரி காசி. விசுவனாதருடன், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழக ஆட்சியாளராக இருந்த வ.சுப்பையா அவர்களும் இணைந்து அப்போது அண்ணாமலைப் பல்கலைக்கழக ஆராய்ச்சிப் பேரறிஞராக இருந்த ஒளவை துரைசாமி அவர்களை வேண்டி, இறுதி நான்கு காதைகளுக்கு உரை எழுதச் செய்தனர்.

1. சமயக் கணக்கர் தந்திரம் கேட்டகாதை
2. கச்சிமாநகர் புக்க காதை
3. தவத்திறம் பூண்டு தருமம் கேட்டகாதை
4. பவத்திறமறுகெனப் பாவை நோற்ற காதை.

இந்நான்கு காதைகளில் கச்சிமாநகர் புக்க காதையைத் தவிர்த்து ஏனைய 3 காதைகளுக்கும் அவ்வளவு எளிதில் உரை எழுதிவிடமுடியாது.

சைவவாதி, பிரம்மவாதி, வைணவவாதி, வேதவாதி, ஆசீவகவாதி, நிகண்டவாதி, சாங்கியவாதி, வைசேடிகவாதி, பூதவாதி எனப் பல்வெறு சமயக் குரவர்களின் தத்துவ விளக்கங்கள் –

பௌத்தத்தின் 12 நிதானங்கள், அவற்றின் மண்டில, கண்ட, சந்தி, தோற்ற, கால வகைகள் –

நால்வகை வாய்மை, ஐவகை கந்தம், அறுவகை வழக்கு போன்ற தத்துவ விளக்கங்களை, வட மொழி பௌத்த நூல்களின் நுண்மான் நுழைபுலத்துடன் உரைவேந்தர் எழுதிய உரையினைப் படித்துப் படித்து மகிழ்ந்து போற்றலாம்.

இப்படிப்பட்ட பேரறிஞருக்கு 1960 ஆம் ஆண்டு மதுரை, திருவள்ளுவர் கழகம் ‘பல்துறை முற்றிய புலவர்’ பட்டத்தையும் –

1980ஆம் ஆண்டு தமிழக ஆளுநர் பிரபுதாஸ் பட்வாரி ‘பேரவைத் தமிழ்ச் செம்மல்’ பட்டத்தையும் –

தமிழ் எழுத்தாளர் சங்கம் ‘தமிழ்த் தொண்டு செய்த பெரியார்’ பட்டத்தையும் வழங்கியிருக்கிறார்கள்.

ஒளவை துரைசாமி அவர்களின் மாணவர் இராதா. தியாகராசன் ‘உரைவேந்தர்’ என்ற பட்டத்தையும், தங்கப் பதக்கத்தையும் வழங்கிப் பெருமை சேர்த்துள்ளார்.

உரைவேந்தர் ஒளவை துரைசாமி அவர்கள் 1981ஆம் ஆண்டு ஏப்ரல் 3ஆம் நாள் காலமானார். ●

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secratary, Dravida Iyyakka Tamilar Peravai.